# மகாகவி காளிதாஸ் அருளிய

# ஷ்யாமளா தண்டகம்

## Shyamala Dandakam

தமிழ் கவிதை சாரமாக...

பி. ஸ்ரீதேவிபிரசாத்
psdprasad.music@gmail.com

PSD PRASAD

அக்டோபர் 2022

**SRI DEVYAI NAMAHA:**

Namaste. Glad to note that you have shown interest in reading through the Tamil translation of Shyamala Dandakam. Kindly note that it is a small attempt to present the summary of the meanings conveyed in the original by the Great Kalidas. It is not a word-by-word translation. Also, it is not in DANDAKAM format. To simplify, it has been presented in a simple and lucid Tamil verse form with no major grammatic embellishments.

Hope you find this useful. Would be eager to listen to your feedback. You may share it via email to psdprasad.music@gmail.com.



PSD PRASAD

1)

ஒளிர்கின்ற மாணிக்க
 வீணையினை இசைப்பாயே !
மிளிர்கின்ற நீலம்போல்
 மேனியிலே ஜொலிப்பாயே !
இனிக்கின்ற சொல்பேசும்
 ஒய்யார தேவியளே !
மாதங்கி மகளுன்னை
 மனதோடு த்யானித்தேன் !

2)

சிரத்தோடு சந்திரனை
 அணிகலனாய் கொண்டாயே !
கரம்நான்கு, கனமார்பு
 குங்குமம்போல் மேனியிலே !
மலரம்பு, கரும்புடனே
 அங்குசமும், பாசமுமே
கரத்தோடு கொண்டாயே !
 ஜகத்தின்தாய் ஆனவளே !

3)

மதங்கமுனி திருமகளே !
 மங்கலமாய் ஆனவளே !
மரகதநிற மேனியளே !
 கடம்பவன வாசினியே !
அருட்கருணை பொழிபவளே !
 ஆயாச அன்னையளே !
திருக்கண்ணின் கடைப்பார்வை
 திரும்பிடுமோ என்மீது?

4)

விளையாட்டுக் கிளிதன்னை
 விரும்புகின்ற தேவியளே !
இசையாகும் சங்கீதம்
 ரசிக்கின்ற அன்னையளே !
மதங்கமுனி புதல்வியளே !
 நீலமலர் போன்றவளே !
ஜெயதேவி ஜெயதேவி
 ஜெயஜெயஸ்ரீ ஷ்யாமளா !

PSD PRASAD

5) DANDAKAM

அற்புதமாய் மணித்வீப
 கடலோரம் எழிலான
கற்பதரு போன்றதுவாம்
 கடம்பமர வனத்தினிலே
விருப்புடனே உறைபவளே !
 விஸ்வேசன் துணையவளே !
கருத்தோடு உலகாவும்
 காக்கின்ற கருணையளே !

6)

உத்தமனாம் மலைராசன்
 இமவானின் புத்திரியே !
ரத்தினங்கள் அழகூட்டும்
 கருநீலக் கூந்தல்முடி
சுற்றிவரும் இசையலையின்
 சுருதியோடு ஆடிடவே...
சந்திரனின் ஒளியினிலே
 சுந்தரமாய் தோன்றிடுமே !

7)

மன்மதனின் மலரம்பாய்
 புருவங்கள் கொண்டவளே!
தண்மைதரும் ரம்யமிகு
 குரலோசை கொண்டவளே !
அண்டமெலாம் கவர்கின்ற
 திலகத்தை தரித்தவளே !
அன்புமிகும் திருமகளே !
 ஆனந்தம் அளிப்பவளே !

8)

கழுத்தோடு மணக்கின்ற
 கஸ்தூரி வாசனையால்
இழுத்தோடி வருகிறதே !
 அணிஅணியாய் தேனீக்கள் !
மிளிர்கின்ற அணிகலனால்
 ஜொலிக்கின்ற மேனியிடம்
ஒளிர்கின்ற சந்திரனின்
 ஒளிகூட தோற்கிறதே !

PSD PRASAD

9)

மாமுனியும், சித்தர்களும்
 மனமாரத் துதிக்கின்ற
மாதங்கி செல்வியளே !
 வீணையிசை குரலினிளே !
காதோரம் பனையோலை
 காதணிகள் ஆடிடுமே !
நாதமிகு வல்லகியை
 நளினமுடன் நீயிசைக்க!

10)

மதுரசத்தைப் பருகியதால்
 செந்நிறமாய் ஆனவிழி
அதுகொடுக்கும் ஒளிவிடவும்
 ஒளிமிகுந்த காதணிகள் !
விருப்போடு கேட்கின்ற
 வரமெல்லாம் தருவாயே !
பெருஞ்செல்வம் பேரின்பம்
 அருள்கின்ற எம்தாயே !

11)

நெற்றிவழி ஓடிவந்த
 முத்துமணி வியர்வைதுளி
சற்றொதுங்கி மூக்கினோரம்
 மூக்குத்தி ஆனதுவோ?
உலகுக்கே உயிர்ப்பொருளாய்
 உய்கின்ற காளியளே !
நலம்சேர்க்கும் ஆசியினை
 நல்கிடுவாய் ! சியாமளையே !

12)

பாக்குடனே வெற்றிலையும்
 சுவைக்கின்ற வாயோரம்
பூக்கின்ற புன்னகையும்
 பெருதாக மயக்கிடுமே !
பூத்தமலர் கையேந்தும்
 பெருஞ்செல்வம் கொண்டோளே !
காத்தருள வேண்டுமம்மா !
 கருணைமழை ஆசியினால் !

PSD PRASAD

13)

முல்லைமலர் மொட்டாலே
 முடிந்ததொரு மாலைபோல்
வெள்ளைநிற பல்வரிசை !
 வெகுவாக மின்னிடுமே !
அங்கிருந்து அலையாகும்
 அழகான புன்னகையே !
சங்கீத இசைமீட்டும்
 சுரவீணை கரத்தினிலே!

14)

செந்நிறமாய் கொவ்வைபோல்
 சேர்ந்திருக்கும் அதரங்கள் !
வெண்ணிறமாம் பாற்கடலில்
 பேரலையின் நடுவினிலே
சந்திரனும் உதிக்கின்ற
 சமயத்தில் தோன்றியதாம்
வெண்சங்கு அதுபோலே
 உன்கழுத்து அழகாகும் !

15)

பலபலவாய் ரத்தினங்கள்
 பொதிந்திருக்கும் அணிகலனும்
மலர்கோர்த்த மாலைகளும்
 மேனியிலே சூடியதால்
பளபளவாய் ஜொலிப்பாயே !
 பேரழகில் மிளிர்வாயே !
நலம்பயக்கும் யாவைக்கும்
 நல்லுருவாய் ஆனாயே !

16)

இளந்தளிராய் ஒளிர்கின்ற
 இருகரமும் அழகாகும் !
பலவிதமாய் நகையணிகள்
 கரத்தோடு அழகூட்டும் !
வளையல்களின் ஜொலிப்பாலே
 புவனமெலாம் ஒளியாகும் !
கலைகளதன் மறுவடிவம் !
 அம்பிகையுன் திருவுருவம் !

PSD PRASAD

17)
வைகறையில் மொட்டவிழும்
தாமரையும் நாணும்படி
கையிரண்டும் பூப்போலே
காண்போரைக் கவர்ந்திருக்கும்!
அணிகின்ற யாவையுமுன்
அழகுக்கே அழகூட்டும் !
புனிதர்களும், முனியோரும்
பணிகின்ற அன்னையளே !

18)

முத்துமணி மின்னுகின்ற
மோதிரங்கள் சூடுகின்ற
பட்டுவிரல் நகங்களெலாம்
பளபளக்கும் சந்திரனாய் !
"சித்ப்ரபை"யின் ஒளியினால்
சூழ்ந்தவளே ச்யாமளையே !
அத்வைத தத்துவத்தின்
அருளான அன்னையளே !

19)

கழுத்தோடு ஒளிர்கின்ற
நகையணியால் மகிழ்வோடு
பெருத்தஇரு மார்புகளின்
பாரத்தால் சிறிதளவு
வளைந்ததனால் இடையோடு
விழுகின்ற மூவரிகள்
அலைபோலத் தோன்றிடுமே !
அழகுக்கடல் மேனியிலே !

20)

தங்கம்மிகு பானைபோல
கொங்கைகளாம் அதன்சுமையில்
அங்கமதில் வளைவிருக்கும் !
அதுபணிவைக் காட்டிவிடும் !
தேவர்களின் தலைமகனாம்
இந்திரனும் பணிபவளே !
மூவுலகும் தொழுபவளே !
மங்கலமாய் தருபவளே !

21)

ஆழமான ஏரிசுற்றி
 ஆடுகின்ற நீர்ச்செடிபோல்
ஆழமான உந்திசுற்றி
 கருத்திருக்கும் ரோமங்கள் !
சின்னஇடை சுற்றிஅணி
 ஒட்டியாண சிணுங்கலொலி
மன்மதனும் தோற்றிடவே
 கிளர்வூட்டும் மோகங்கள்!

22)

ரத்தினங்கள் மின்னுகின்ற
 பட்டாடை பூண்டவளே !
சிற்றிடையின் அணிகலணின்
 வைரமணி ஜொலிப்பின்முன்
சுந்தரமா மேருவுமே
 சுமாரெனத் தோன்றிடுமே !
சந்திரனின் தண்மைமிகு
 சுந்தரியே ! வந்தனங்கள்!

23)

செந்தூரம் பூசியதாம்
 இந்திரனின் யானையதன்
தந்தத்தின் அழகினையும்
 தாண்டுமெழில் செழுந்தொடைகள் !
செந்நிறமாய் அதைமறைக்கும்
 செம்மஞ்சள் உடையதுவோ
பொன்னிறமாய் மின்னுகிற
 புரசுமலர் போலிருக்கும்

24)

மன்மதனின் மலரம்பு
 தூணிபோல அழகினோடு
பெண்மையதன் நளினமுடன்
 நடைபழகும் கால்களுமே !
கருமைநீல அழகியளே !
 கவின்மிளிரும் மேனியளே !
கருணைமழை நில்லாது
 கடலெனவேப் பொழிபவளே !

PSD PRASAD

25)

பிறைநிலவாய் வளைந்திருக்கும்
  விரல்நகங்கள் மின்னிடுமே !
திசைகளெட்டின் பாலகரின்
   துணைவியரும் தொழுபவளே !
மிளிருகின்ற கூந்தலினை
  மேயவரும் மான்களுமே !
ஒளிருகின்ற மேனியளே !
  மாசிலாத தூயவளே !

26)

தேவலோக இந்திரனும்
  குபேரனும், வருணனுமே
மூவருடன் வாயுதேவன்
  அக்கினியும், காலனுமே
தலைவணங்கி பணிவதனால்
  அவர்மகுட ரத்தினங்கள்
மலர்பாதம் அதில்பட்டு
  மின்னிடுமே ஜொலிப்புடனே !

27)

செந்நிறத்து சூரியனாய்
  செங்கமல பதமலர்கள்
மின்னுகின்ற இளமையதன்
  எழிலகமாய் ஆனதுவோ?
பார்வதியின் திருவுருவே !
  தாமரையைக் கொண்டவளே !
பேரழகாய் ரத்தினத்து
  பீடமதில் அமர்ந்தவளே !

28)

வைரமணி ஒளிருகின்ற
  ஆசனத்தில் அமர்ந்தவளே !
பைரவர்கள் எட்டுடனே
   துர்க்கையளும், கணபதியும்
புடைசூழ உறைபவளே !
  புகழோங்கும் பேரழகே !
படையாக மாதங்கியர்
  பணிந்தேற்றும் தேவியளே !

PSD PRASAD

29)

சங்கநிதி, பத்மநிதி
 சேவைகளை செய்திடவார் !
மஞ்சுளையும், மேனகையும்
 மனமகிழ்ந்து போற்றிடுவார் !
யட்சர்களும், கந்தர்வரும்
 சித்தகணம் அத்தனையும்
லட்சுமியுடன் எட்டுவித
 சக்தியரும் வணங்கிடுவார் !

30)

மன்மதனின் அம்புகளின்
 மந்திரமாய் ஆனவளே !
மன்மதனும், அவன் துணையும்
 வந்தனங்கள் செய்பவளே !
இன்பமிகும் வசந்தகால
 அன்பினளே ! ஷ்யாமளையே !
அன்புடனே வேண்டுவோர்க்கு
 அனைத்தையுமே தருபவளே !

31)

யோகியரின் இதயத்திலே
 ஜோதியாக ஒளிர்ந்திடுவாய் !
மோகனநல் இசைவிரும்பும்
 மாதவனும் போற்றிடுவான் !
நான்முகனும் துதித்திடுவான் !
 வாத்யமெலாம் இசைமீட்டி
ஊனுருகி வித்யாதரர்
 உன்புகழைப் பாடிடுவார் !

32)

கின்னரர்கள் உனைப்புகழ்ந்து
 வீணையிசை மீட்டிடுவார் !
விண்ணவரின் துணைவியரும்
 வேண்டிஉனைத் தொழுதிடுவார் !
கந்தர்வரும், சித்தர்களும்
 யட்சர்களும் வணங்கிடுவார் !
வந்தனங்கள் செய்து உனை
 வாழ்த்திடுவார் தேவருமே !

PSDPRASAD

33)

அம்சமாக விரியுமிரு
 பச்சைநிற சிறகுடனும்
கிம்சுகப்பூ அதைவிஞ்சும்
 செந்நிறத்து மூக்குடனும்
உன்னுடனே விளையாடும்
 கிளியழகு கவர்ந்திடுமே !
வண்ணமிகு வரிகள்மூன்று
 கொண்டிருக்கும் கழுத்தினிலே !

34)

அங்குசமும், பாசமுடன்
 ஜபமாலை, புத்தகமும்
தங்கமலர் கைகளிலே
 தாங்குகின்ற நின்னுருவை
எவரொருவர் பக்தியுடன்
 மனதோடு நினைத்திடினும்
அவரறிவு ஒளிமிகுந்து
 கவிதைவரும், உரைவருமே !

35)

செந்நிறமாய் மிளிர்ந்திடும் உன்
 மேனியினை நினைப்பார்க்கு
பெண்களென, ஆண்களென
 வசப்படுவார் அனைவருமே !
பொன்னிறமாய் ஒளிர்பவளாய்
 நின்நினைவைக் கொள்பவர்கள்
பொன்பொருளும், செல்வங்களும்
 பெற்று உளம் மகிழ்ந்திடுவார் !

36)

கருமைநிற மெல்லியளாய்
 பிறைநிலவை தரித்தவளுன்
உருஎண்ணி துதிப்போர்க்கு
 கைகூடா ஒன்றுளதோ?
மண்ணுலகே துதிப்பவர்க்கு
 அரியணையாய் ஆகிவிடும்
விண்ணுலக நந்தவனம்
 விளையாடும் இடமாகும் !

PSD PRASAD

37)
அலையாடும் கடலதுவும்
 களிக்கின்ற குளமாகும் !
கலைமகளும் அவனுக்கே
 காத்திருப்பாள் அருளிடவே !
திருமகளும் பணிப்பெண்ணாய்
 செய்திடுவாள் சேவைகளை !
ஒருகுறையும் இல்லையென
 வாழ்வாரே மகிழ்வுடனே !

38)
மந்திரங்கள் வடிவினளே !
 யந்திரங்கள் வடிவினளே !
தந்திரங்கள் வடிவினளே !
 தத்துவங்கள் வடிவினளே !
அறிவதனின் வடிவினளே !
 ஆற்றலதன் வடிவினளே !
ஒலிகளவை வடிவினளே !
 எழுத்துகளின் வடிவினளே !

39)

சொற்களதன் வடிவினளே !
 சகமனைத்தின் வடிவினளே !
தீர்த்தங்களின் வடிவினளே !
 யோகங்களின் வடிவினளே !
யாதுமாகி எங்குமாக
 நிறைந்திருக்கும் தேவியளே !
காத்துஅருள வேண்டுமம்மா !
 கரம்குவித்து வணங்கினேன் !

PSDPRASAD